<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தென்காசி</u>

**Date : 01.12.2025**

**SC No. : 278/2022**

**Pw : 5**

**Name : திரு. ராமர்**

**( A1, A2 Present.)**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் மரக்கடையில் அறுப்பு வேலை செய்கிறேன் என்றால் சரிதான். பாத்திமா மரக்கடை இலஞ்சி போகும் விலக்கில் உள்ளது என்றால் சரிதான். வழக்கமாக காலை 7 மணிக்கு வேலைக்கு சென்றால் இரவு 7 மணிக்கு வீடு திரும்புவேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம் எனக்கு மகன் முறை வேண்டும் என்றால் சரிதான். எனது வீடு இறந்துபோன மாரிச்செல்வத்தின் வீடு அருகே உள்ளது என்றால் சரிதான். சாட்சி சுப்பிரமணி என்பவர் இறந்துபோன மாரிச்செல்வத்தின் பெரியப்பா ஆவார். நான் அய்யாபுரம் ஊரில் வசித்துவருவதால் அங்கே வழக்கமாக நடக்கும் சங்கதிகள் உடனே எனக்கு தெரியவரும் என்றால் சரிதான். மாரிச்செல்வம் இறப்பதற்கு முதல்நாள் இரவு நான் ஊரில்தான் இருந்தேன் என்றால் அப்போது நான் ஊரில் இல்லை, சம்பவம் நடந்த அன்றுதான் ஊருக்கு வந்தேன். சம்பவத்திற்கு முந்தைய நாள் இரவு இறந்துபோன மாரிச்செல்வத்தின் சித்தப்பாவிற்கும், பொன்னுசாமி மகன் சரவணன் என்பவருக்கும் இரவு 11.30 மணியளவில் எங்கள் ஊர் கோவில் அருகே பிரச்சனை நடந்து, அது சம்பந்தமாக போலீசார் வந்து விசாரணை செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மாரிச்செல்வம் இறந்துபோன தகவல் எனக்கு மதியம் 03.00 மணியளவில் தெரியவந்தது. எங்கள் ஊர் கோவில் அருகே நான் இருந்தபோது எனக்கு அந்த தகவல் தெரிந்தது. நான் தற்செயலாக சம்பவ இடத்திற்கு சென்றபோது போலீசார் இருந்தார்கள். நான் சம்பவ இடம் சென்ற சமயத்தில் போலீசாருடன் சுமார் 4 - 5 நபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். போலீசார் எப்போது சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்ற

விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தென்காசி ஆய்வாளர் தனது கைப்பட மேற்படி பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியை தயார் செய்தார். ரத்தம் படிந்த தார் ரோடு துண்டை எவ்வாறு உடைத்து எடுத்தார்கள் என்றால் அருகே இருந்த கொத்தனார் உதவியுடன் கம்பியால் ரோட்டை உடைத்து எடுத்தார்கள். அவ்வாறு எடுத்துக்கொடுத்த நபரும் உள்ளூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். போலீசார் அந்த நபரிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

நான் இறந்த நபரின் சடலத்தை பார்க்கவில்லை, துக்கம் கேட்டு அவரது வீட்டிற்கும் போகவில்லை. நான் சொன்னதுபோல், சம்பவதினத்தன்று மாலை 04.00 மணிக்கு சென்றதாக சொல்வதும், அங்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் அத்தாட்சி தயார் செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. போலீசார் சம்பவஇடத்திற்கு மதியம் 01.00 மணியளவில் வந்து இறந்தவரின் சடலம் மற்றும் மோட்டார் சைக்கிளை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றும், மேற்படி பார்வை மகசர் மற்றும் அத்தாட்சி ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றும், நான் இறந்துபோன நபரின் உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து மேற்படி ஆவணங்களில் கையொப்பம் போட்டு கொடுத்துவிட்டு தற்போது அதற்கேற்ப உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.278/2022**

Depositions of Witness for Prosecution Pw 6
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுப்பிரமணியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of December 2025.

**(A1, A2 Present. )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அய்யாபுரத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இருவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். கடந்த 24.04.2022 அன்று நானும், கே.ஆர். காலனியை சேர்ந்த சுப்பையா மகன் வெங்கடாஜலபதியும் பஸ் ஏறுவதற்காக ஐ.டி முக்கு ஆட்டோ ஸ்டாண்ட் அருகே நின்றுகொண்டிருந்தோம். அப்போது மதியம் 02.15 மணி இருக்கும். அப்போது தென்காசி காவல் ஆய்வாளர், வேதம்புதூர்

காமராஜர் காலனியை சேர்ந்த இசக்கி (எ) ஐஸ் மகன் சரவணன் மற்றும் காமராஜர் தெருவை சேர்ந்த முத்துக்குமார் ஆகிய இருவரையும் அழைத்து வந்து மாரிச்செல்வம் கொலை சம்பந்தமாக மேற்படி எதிரிகளை அங்கே அழைத்து வந்துள்ளதாகவும், எங்களை அதற்கு சாட்சியாக இருக்குமாறும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டார். அப்போது தென்காசி ஆய்வாளர் எதிரி சரவணனை விசாரணை செய்தபோது, எந்த துன்புறுத்தலும், மிரட்டலும் இல்லாமல் தானாக முன்வந்து குளத்தூரான் மகன் மாரிச்செல்வத்தை முன்விரோதத்தின் காரணமாக மணக்கவுடையார் சாஸ்தா கோவில் அருகே வைத்து தானும், முத்துக்குமாரும் சேர்ந்து மாரிச்செல்வத்தை கொலை செய்துவிட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சரவணன் ஆய்வாளரிடம் சொல்ல சொல்ல அதனை அருகிலிருந்த ஒரு காவலர் தன்னிடமிருந்த லேப்டாப்பில் தட்டச்சு செய்துகொண்டார். அதை அருகே இருந்த ஒரு கடையில் பிரிண்ட் அவுட் எடுத்துக்கொண்டு வந்து ஒரு காவலர் கொடுத்தார். எப்படி கொலை செய்தோம், எதற்காக கொலை செய்தோம் என்ற எல்லா விவரங்களையும் சரவணன் அதில் தெரிவித்திருந்தார். தன்னை அழைத்து சென்றால், கொலை சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்களையும், பொருட்களையும் எடுத்து ஆஜர் செய்வதாக சரவணன் குறிப்பிட்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சரவணன், முத்துக்குமார் கையொப்பமிட்டார்கள். சாட்சிகளாக வெங்கடாஜலபதியும் நானும் அதில் கையொப்பமிட்டோம். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ-5** ஆகும்.

அதன் பிறகு கொலைக்கு பயன்படுத்திய சரவணனின் பல்சர் இருசக்கர வாகனத்தையும், சரவணன், முத்துக்குமார் ஆகியோரது செல்போன்களையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார்கள். ஆய்வாளர் அதனை ஐ.டி. முக்கு ஆட்டோ ஸ்டாண்ட் அருகே வைத்து ஒரு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அதில் சாட்சிகளாக வெங்கடாஜலபதியும் நானும் கையொப்பமிட்டோம். அந்த **அத்தாட்சி அ.சாஆ- 6** ஆகும். போலீசார் கைப்பற்றிய 2 செல்போன்கள் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. அந்த **செல்போன்கள் சா.பொ.16 மற்றும் 17** ஆகும். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பல்சர் இருசக்கர வாகனத்தின் புகைப்படம் சா.பொ.2 தான்.

அதன் பின்னர் மேற்படி எதிரிகளுடன் காவல் ஆய்வாளருடன், நானும் வெங்கடாஜலபதியும் காவல் துறை வாகனத்திலேயே வேதம்புதூர், காமராஜர் காலனியில் உள்ள சரவணனின் வீட்டிற்கு மாலை 04.00 மணியளவில் சென்றோம். தன்னுடைய

வீட்டிலிருந்து சரவணன், ஒரு ரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டையையும், ரத்தக்கறை படிந்த செருப்பையும், ரத்தக்கறை படிந்த ஒரு அரிவாளையும் எடுத்து ஆஜர் செய்தார். தன்னுடைய வீட்டின் போர்டிகோவில் நிறுத்தியிருந்த முத்துக்குமார் பயன்படுத்திய Splender இருசக்கர வாகனத்தையும் அடையாளம் காட்டி ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் ஒரு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ- 7** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வெள்ளை நிற முழுக்கை சட்டை சரவணன் எடுத்து ஆஜர் செய்ததாகும். **முழுக்கை சட்டை சா.பொ. 18** ஆகும். சரவணன் எடுத்து ஆஜர் செய்த **பிரவுண் கலர் செருப்பு சா.பொ.19** ஆகும். ரத்தக்கறை படிந்த அரிவாள் சா.பொ.1 தான்.

எதிரி சரவணன் அடையாளம் காட்டி ஆஜர் செய்த Splender இருசக்கர வாகனம் தற்போது நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது- அந்த **Splender இருசக்கர வாகனம் சா.பொ.20** ஆகும். அதன் பிறகு மாலை 06.00 மணிக்கு மேல் போலீசார் என்னை இதுசம்பந்தமாக விசாரித்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) இறந்துபோன மாரிச்செல்வத்தின் தகப்பனார் குளத்தூரான் எனக்கு சகோதரர் முறை வேண்டும் என்றால் சரிதான். அ.சா.2 முப்புடாதி, எனது மகன் என்றால் சரிதான். மாரிச்செல்வம் நடத்தி வந்த கோழிப்பண்ணைக்கு அருகே எங்களுக்கும் மாரிச்செல்வத்திற்கும் உரிமைப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். கோழிப்பண்ணை அருகே, பொன்னுசாமி மகன் சரவணனுக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. எனக்கும், பொன்னுசாமி மகன் சரவணன் மற்றும் இறந்துபோன மாரிச்செல்வம் ஆகியோருக்கிடையே நிலம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, இது சம்பந்தமாக காவல்நிலையம் சென்று விசாரணைக்கு ஆஜரானோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தம்பி குளத்தூரானுக்கும், சரவணனுக்குமிடையே அடி தடி தகராறு ஏற்பட்டு காவல்நிலையத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது-

2) மாரிச்செல்வம் கொலை செய்யப்பட்ட முந்தைய நாள் இரவு, எங்கள் ஊரில் இருதரப்பினருக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு கலவரம் நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது- அருணாசலம் மகன் முத்துமாரிக்கும், பொன்னுசாமி மகன் சரவணனுக்கும் இடையே சம்பவத்திற்கு முந்தையநாள் இரவு அடிதடியாகி, காயம்பட்ட

நபரை முத்துக்குமார் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. தென்காசி அரசு மருத்துவமனையில் காயம்பட்ட நபரான முத்துமாரியை அனுமதித்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது- 23.04.2022 அன்று 2 வது எதிரி முத்துக்குமார் எங்கள் ஊரை சேர்ந்த அருணாசலம் மற்றும் முத்துமாரி ஆகியோர் தன்னை 22.04.2022 அன்று இரவு தாக்கியதாக ஒரு புகார் கொடுத்தார் என்றும், அது குற்ற எண். 243/2022 ஆக வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது- எனக்கும், சரவணன், முத்துக்குமார் ஆகியோருக்கிடையே சொத்து தகராறு இருந்துள்ளது என்றும், தனிப்பட்ட பகையின் காரணமாக எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) ஐ.டி. முக்கு ஆட்டோ ஸ்டாண்ட் என்பது நான்கு ரோடு சந்திப்பு அருகில் உள்ளது என்றால் சரிதான். வடக்கே செல்லும் சாலை மதுரைக்கு செல்கிறது என்றால் சரிதான். கிழக்கே செல்லும் சாலை தென்காசிக்கு செல்கிறது என்றால் சரிதான். தெற்கே செல்லும் சாலை குற்றாலம் செல்லும் சாலையில் எங்கள் ஊர் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் நான் எதற்காக ஐ.டி முக்கு பகுதிக்கு சென்றேன் என்றால் தென்காசி செல்வதற்காக அங்கிருந்த பேருந்து நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தேன். அந்த பகுதியில் பல்வேறு டீக்கடைகள் மற்றும் உணவகங்கள் நான்கு ரோட்டிலும் நெருக்கமாக உள்ளன என்றால் சரிதான். போலீசார் ஐ.டி. முக்கு ஆட்டோ ஸ்டாண்ட் பகுதியில் என்னை பார்த்தார்கள், அப்போது சுமார் 10 -15 ஆட்டோக்கள் அங்கு நின்றுகொண்டிருந்தன என்றால் அதுசரியாக நியாபகமில்லை, ஆனால் சில ஆட்டோக்கள் நின்றுகொண்டிருந்தன. போலீசார் சுமார் 1 மணி நேரம் ஒப்புதல் வாக்குமூல விவரங்களை எழுதிக்கொண்டார்கள். ஜீப்பில் வைத்து லேப்டாப்பில் தட்டச்சு செய்துகொண்டார்கள். அப்போது இரண்டு எதிரிகளும் ஜீப்பில் இருந்தார்கள், நான் ஜீப்பின் அருகே நின்றுகொண்டிருந்தேன். காவல் ஆய்வாளரும் அப்போது ஜீப்பின் வெளியேதான் நின்றுகொண்டிருந்தார். குறிப்பாக எந்த இடத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்பது தற்போது எனக்கு நியாபகமில்லை. தட்டச்சு செய்யப்பட்ட விவரங்கள் மட்டும் பிரிண்ட் அவுட் எடுத்த விவரங்களை நான் போலீஸ் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) ஆய்வாளர், அருகேயுள்ள ஆட்டோ ஓட்டுநர்கள் அல்லது கடைக்காரர்களை ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருக்குமாறு அழைத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.ஆ. 6 ஆவணத்தை எழுதிய நபர் யார் என்றால் காவல் ஆய்வாளர்

சொல்ல சொல்ல, ஒரு காவலர் எழுதினார், அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. சரவணன் வீட்டில் நாங்கள் சென்றபோது வேறு யாரும் இல்லை. வீடு பூட்டப்பட்டிருந்தது. சரவணன்தான் வீட்டை திறந்தார். அந்த வீட்டில் மொத்தம் எத்தனை அறைகள் இருந்தன என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அதனால் எந்த அறையில் மேற்படி பொருட்களை சரவணன் எடுத்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சரவணனின் வீட்டின் அருகே வேறு சில வீடுகளும் இருந்தன என்றால் சரிதான். பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரையாவது சாட்சியாக இருக்குமாறு ஆய்வாளர் அழைத்தாரா என்றால் அதுபற்றி எனக்குதெரியாது.

5) எதிரிகளை சம்பவத்தன்று இரவே போலீசார் அழைத்து சென்றுவிட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது- நான் சொன்னதுபோல், நான் குத்துக்கல் வலசை பகுதிக்கு சென்றதாகவும் அங்கு போலீசார் எதிரிகளை அழைத்து வந்ததாகவும், அப்போது எதிரி சரவணன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் எதிரி சரவணனின் இருசக்கர வாகனம் மற்றும் இரு செல்போன்களை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும் அதன் பின்னர் எதிரி சரவணனின் வீட்டிற்கு சென்று போலீசார் ரத்தக்கறை படிந்த உடைகள் மற்றும் அரிவாளை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் நானும், வெங்கடாஜலபதி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரி சரவணன் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் முன்னிலையில் ஒரு காவலர் ஒப்புதல் வாக்குமூலத்தை அந்த இடத்திலேயே தட்டச்சு செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தட்டச்சுசெய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை அருகிலிருந்த கடையில் பிரிண்ட் அவுட் எடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், சாட்சி வெங்கடாஜலபதியும் காவல்நிலையத்தில் மேற்படி கையொப்பங்களை போட்டுக்கொடுத்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரு இருசக்கர வாகனங்களையும் போலீசார், சம்பவம் நடந்த அன்று இரவே காவல்நிலையத்திற்கு எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிவாள் மற்றும் உடைகளுக்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன மாரிச்செல்வம், எனது சகோதரரின் மகன் என்பதால் நான் இவ்வழக்கில் அரசு தரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மேற்படி குறுக்கு விசாரணை 2 ம் எதிரி தரப்பில் ஏற்கப்படுகிறது)**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**